

முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (2.12.2025) தலைமைச் செயலகத்தில், எழுதுபொருள் மற்றும் அச்சுத்துறையில் பணிபுரியும் பணியாளர்களுக்காக சென்னை, தண்டையார்பேட்டை, காமராஜர் நகரில் 39 கோடியே 30 இலட்சம் ரூபாய் செலவில் நவீன வசதிகளுடன் கூடிய 96 குடியிருப்புகளுடன் கட்டப்பட்டுள்ள தமிழ்நாடு அரசு அச்சகப் பணியாளர் குடியிருப்பினை திறந்து வைத்தார். இந்நிகழ்ச்சியில் தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அமைச்சர் மு.பெ.சாமிநாதன், தலைமைச் செயலாளர் நா.முருகானந்தம், தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை செயலாளர் வே.ராஜாராமன், எழுதுபொருள் மற்றும் அச்சுத்துறை ஆணையர் திருமதி வெ.ஷோபனா, செய்தி மக்கள் தொடர்புத்துறை கூடுதல் இயக்குநர் (செய்தி) ச.செல்வராஜ் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



நாகை மாவட்டம் நாகை நகராட்சி காடம்பாடி நடுநிலைப்பள்ளியில் டித்வா புயல் காரணமாக ஏற்பட்ட மழையால் பாதிக்கப்பட்டு நிவாரண முகாமில் தங்கவைக்கப்பட்டுள்ள பொது மக்களுக்கு பள்ளி கல்வித்துறை அமைச்சர் அன்பில் மகேஷ் பொய்யாமொழி நிவாரணப் பொருட்களை வழங்கினார். உடன் நாகை மாவட்டக் கழக செயலாளரும், தமிழ்நாடு மீன்வளர்ச்சி கழகத் தலைவருமான என். கௌதமன், நாகை மாவட்ட ஆட்சித்தலைவர்ப.ஆகாஷ், நாகை சட்டமன்ற உறுப்பினர் ஜெ.முகம்மது ஷா நவாஸ், மாவட்ட காவல் கண்காணிப்பாளர் சு.செல்வகுமார், நாகை நகர கழக செயலாளர்கள் இரா. மாரிமுத்து ஆகியோ உள்ளனர்.

### துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் பிறந்தநாள் விழா!

# புதுக்கோட்டை வடக்கு மாவட்டம் கந்தர்வக் கோட்டையில் அன்னதானம்!

## என்.பரமசிவம் – மா.தமிழ் அய்யா வழங்கினர்!

புதுக்கோட்டை.டிச.4-

புதுக்கோட்டை வடக்கு மாவட்டம் கந்தர்வகோட்டையில் புதுக்கோட்டை வடக்கு மாவட்ட கழக. செயலாளர் கே.கே. செல்லப்பாண்டியன் அறிவுறுத்தலின் பேரில்,'தமிழக துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்த நாளை முன்னிட்டு தெற்கு, வடக்கு ஒன்றிய கழக செயலாளர்கள் மங்களாகோவில் பரமசிவம் கோமாபுரம் தமிழ் அய்யா ஆகியோர் தலைமையில் கந்தர்வகோட்டை முக்கிய வீதி வழியாக ஊர்வலமாகச் சென்று பேருந்து நிலையம் அருகே பட்டாசு வெடித்து பொதுமக்களுக்கு இனிப்பு வழங்கியும்,

அதனைத் தொடர்ந்து புதுக்கோட்டை சாலையில் உள்ள முத்தமிழ் அறிஞர் கலைஞர் திருஉருவச் சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தி, வடக்கு ஒன்றிய சார்பாக அன்னதானம் வழங்கப்பட்டது.

அதனைத் தொடர்ந்து கந்தர்வகோட்டை அரசு மருத்துவமனையில் உள் நோயாளிகளுக்கு பால், பிரட், பழங்கள் போன்ற பொருட்களை வழங்கினர். அதனைத் தொடர்ந்து கந்தர்வகோட்டை இந்திரா நகர் தொடக்கப் பள்ளியில் தெற்கு ஒன்றிய இளைஞரணி சார்பாக பள்ளி குழந்தைகளுக்கு நோட்டு புத்தகம் அன்னதானம் வழங்கப்பட்டது.

அதனைத் தொடர்ந்து இந்திரா நகர் பொதுமக்களுக்கு அன்னதானம் வழங்கப்பட்டது.

நிகழ்ச்சியில் ஒன்றிய செயலாளர் மங்களகோவில் எம்.பரமசிவம் கோமாபுரம் மா.தமிழ் அய்யா, மாவட்ட மகளிர் அணி அமைப்பாளர் தவசுமணி, மாவட்ட மீனவர் அணி அமைப்பாளர் ராஜா, துணை அமைப்பாளர் ஜானகிராமன், ஒன்றிய கவுன்சிலர் நியூஸ் ராஜேந்திரன், ஒன்றிய இளைஞரணி அமைப்பாளர் எஸ்.ஆர்.கலையரசன், துணை அமைப்பாளர்கள் பிரகாஷ், சுரேஷ்,

முன்னாள் ஊராட்சி மன்ற தலைவர்கள் முதுகுளம் பாலு, அரவம்பட்டி முத்துக்குமார், தாமரை பழனிவேல், ராஜேந்திரன், அவைத் தலைவர் சுப்பிர மணியன், விவசாய அணி முருகேசன், பொருளாளர் நெப்புகை சரவணன், வேலுமயில், ஒன்றிய துணைச் செயலாளர் அம்பிகாபதி, ராமராஜ், மற்றும் தெற்கு வடக்கு ஒன்றிய அனைத்து அணி நிர்வாகிகளும் தொண்டர்களும் திரளாக கலந்து கொண்டனர்.

### குத்தாலத்தில் முன்னாள் அமைச்சர்

# கோ.சி.மணி நினைவு நாள் ஊர்வலம் - சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை!

## நிவேதா எம்.முருகன் எம்.எல்.ஏ. – குத்தாலம் பி. கல்யாணம் தலைமையில் நடைபெற்றது!

மயிலாடுதுறை,டிச. 4-

முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களால் தம்பி மணி என அழைக்கப்பட்ட கழகத்தின் தளகர்த்தர்களில் முதன்மையாக திகழ்ந்த சோழ மண்டல தளபதி என அழைக்கப்பட்ட முன்னாள் அமைச்சர் கோ.சி. மணி அவர்களின் நினைவு நாளை முன்னிட்டு மயிலாடுதுறை மாவட்டம் குத்தாலத்தில் ஒன்றிய கழக அலுவலக வளாகத்தில் வைக்கப்பட்டுள்ள கோ.சி.மணி அவர்களின் சிலைக்கு கழக உயர்நிலை செயல் திட்டக் குழு உறுப்பினருமான குத்தாலம் பி.கல்யாணம், மாவட்டக் கழகச் செயலாளரும், பூம்புகார் சட்டமன்ற உறுப்பினர் நிவேதா எம்.முருகன் ஆகியோர் தலைமையில் கழகத்தினர் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார்கள்.

முன்னதாக குற்றாலம் கடை தெரு பேரூராட்சி அலுவலகம் அருகில் இருந்து குத்தாலம் ஒன்றிய கழக அலுவலகம் வரை அமைதி ஊர்வலம் நடைபெற்றது.

நிகழ்ச்சியில் கழக கொள்கை பரப்பு துணைச் செயலாளர் குத்தாலம் க. அன்பழகன், தகவல் தொழில் நுட்ப அணி மாநில துணைச் செயலாளர் பி.எம். ஸ்ரீதர், தலைமைச் செயற்குழு உறுப்பினர் இராம.இளங்கோவன், மாவட்ட கழக அவைத் தலைவர் கே.ஜி.சீனிவாசன், மாவட்டக் கழக கழக துணைச் செயலாளர், எஸ்.செல்வமணி,

ஒன்றியக் கழகச் செயலாளர்கள் கு.வைத்தியநாதன், மங்கை எம்.சங்கர், ஏ.ஆர்.ராஜா, மூவலூர் எம்.மூர்த்தி, என். இளையபெருமாள். செல்லசேது.ரவிக்குமார், மலர்விழிதிருமாவளவன், பி.எம். அன்பழகன், எம்.அப்துல்மாலிக் ஞான இமையநாதன், பமுருகமணி, பஞ்சு. குமார், அமிர்த.விஜயகுமார், ஏ.ஜி.ஜெ.பிரபாகரன், நகர கழகச் செயலாளர்கள் குண்டாமணி (எ) என்.செல்வராஜ், ம.சுப்பராயன், பொதுக் குழு உறுப்பினர்கள் பி. சிவதாஸ், ஹர்ஷத், நத்தம் ஏ. வின்சென்ட், பி. கென்னடி, அ.காந்தி, பேரூர் செயலாளர்கள் எம்.சம்சுதீன், என்.அண்ணாதுரை, எம்.கே.முத்துராஜா, எம்.அன்புச்செழியன், அரசு வழக்கறிஞர்இராம. சேயோன்.

மாவட்ட சார்பு அணி அமைப்பாளர்கள் கஅறிவுச்செல்வன், எம். கே.மருது, இரா.முருகன், இரா.மனோகரன், வி.எஸ்.பிரபாகர், வெடி எஸ்.பாலமுருகள், இளைஞர் அணி துணை அமைப்பாளர்கள் கோசி.மதி. திருமா வளவன், குத்தாலம் பேரூராட்சி தலைவர் சங்கீதா மாரியப்பன், ஒன்றிய குழு முன்னாள் தலைவர் மகேந்திரன் மற்றும் ஒன்றிய, நகர, பேரூர், கிளை. வார்டு, கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

